## இறுதிச் செபம்:

அதிச உறுப்பினர் ஒருவரை செபம் சொல்ல அழைக்கலாம்.

## முடிவு பாடல்:



### இறைவா இதோ வருகின்றோம்

இறைவா இதோ வருகின்றோம்
உம்திரு உள்ளம் நிறைவேற்ற
இறைவா இதோ வருகின்றோம்

1. கல்லான இதயத்தை எடுத்துவிடு
   எம்மை கனிவுள்ள நெஞ்சுடனே வாழவிடு 2
   எம்மையே நாங்கள் மறக்கவிடு 2
   கொஞ்சம் ஏனையோர் துன்பம் நினைக்கவிடு

2. பலியென உணவை தருகின்றோம்
   நிதம் பசித்தோருக்கு உணவிட
   மறக்கின்றோம் 2
   கடமை முடிந்ததென நினைக்கின்றோம் 2
   எங்கள் கண்களை கொஞ்சம் திறந்துவிடு

3. துளிர்க்கும் விழிநீர் கொணர்கின்றோம்
   அதை துடைப்பாய் என உனை
   கேட்கின்றோம் 2
   வறியவர் சிந்தும் கண்ணீரை 2
   இன்று மறந்தோம் எம்மை மாற்றிடுவாய்.

INTERNAL CIRCULATION ONLY
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம் | அக்டோபர் 2018

# அதிசசிந்தனை

நம்பிக்கை:

# தடைகளைக் கடந்து கிறிஸ்துவோடு பயணிக்கிறேன்

**நோக்கம்:** என்னுடையது **நிகழ்வு:** இளைஞர் மாநாடு

## அறிமுகம்:

“இளைய தலைமுறை, விசுவாசத்தையும் அழைப்பையும் உய்த்துணர்தல்” என்ற கருப்பொருளை 15வது ஆயர் பேரவைக்கு திருத்தந்தை பிரான்சிஸ் தேர்வு செய்துள்ளார். இவ்வாண்டு அக்டோபர் மாதம் ரோம்மில் அது நடைபெறும். ஹுவாழ்வின் முழுநிறைவையும் அன்பையும் கண்டறிந்து ஏற்றுக்கொள்வதற்கு இளைய தலைமுறை எவ்வாறு வழிநடத்துவது என்பதை ஆராய்வதற்கும், இக்காலத்தில் நற்செய்தியை அறிவிப்பதற்கு மிகவும் பொருத்தமான வழியை அடையாளம் காண்பதற்கு திருச்சபைக்கு உதவும்படி இளைய தலைமுறையைக் கேட்டுக் கொள்வதற்கும்ஹூ திருச்சபைக்கு வாய்ப்பு வழங்குவதே ஆயர் பேரவையின் நோக்கம் என முன்-தயாரிப்பு அறிக்கை கூறுகிறது.



## தொடக்கச் செபம்:

செபம் சொல்ல அதிச உறுப்பினர் ஒருவரை அழைக்கலாம்

## ஆரம்பப் பாடல்:

### அழைக்கும் இறை உன் குரல்

அழைக்கும் இறை உன் குரல் கேட்போம் உம்
அழைப்பினை ஏற்று பின் தொடர்வோம்
அழைக்கும் இறை உன் குரல் கேட்போம்

1. எரியும் புதரில் மோயிசனை
வீசும் காற்றில் எலியாசை 2
இடியின் ஒலியில் சின்னப்பரை (2)
இறைவன் அழைத்து வாவென்றுரைத்தார்
வாவென்றுரைத்தார்

2. அழைப்பை ஏற்று விரைகின்றோம்
அருளால் நிறைந்து வாழ வைப்பாய் 2
தனக்கென வாழா பணியேற்றோம் (2)
பிறர்க்கென வாழும் வரம் நல்கிடுவாய்
வரம் நல்கிடுவாய்

3. தகுதியில்லாத எமை ஏனோ
இறைவா விரும்பி அழைத்தாயோ 2
உனக்கென உள்ளத்தை அளிக்கின்றோம் (2)
உறவென உனையாம் அடையச் செய்திடுவாய்
அடையச் செய்திடுவாய்

## உரையாடல்:

அந்த முன்–தயாரிப்பு அறிக்கையின் மூன்றாம் பகுதி, இன்றைய இளைஞர்களுடன் கிறிஸ்துவச் சமூகம் எவ்வாறு பயணம் செய்ய முடியும் என்பதற்கான சில வழிகளைக் குறிப்பிட்டுள்ளது. அதனை இன்று நாம் ஆராய்வோம்.

### 1. இளைய தலைமுறையுடன் பயணித்தல்

குறிப்பிட்ட சிந்தனையோடு அல்லது திட்டத்தோடு அல்லாமல் திறந்த மனத்தோடு இளைய தலைமுறையுடன் பயணித்தல். இளைஞர்களை அவர்கள் நிலையில் சந்தித்து, அவர்களது காலக்கட்டத்தையும் வாழ்வுமுறையையும் உணர்ந்து, அவர்களை மதிக்க வேண்டும். வாழ்க்கையின் அர்த்தத்தை தேடி அன்றாட வாழ்வில் தங்களது நிலையைப் பதிவு செய்ய விரும்பும் அவர்களது விருப்பத்தை புரிந்து கொண்டு, இதனை மேற்கொள்ள வேண்டும். “ஒவ்வொரு சமூகமும், இளைய தலைமுறையினரின் சொந்த வாழ்விற்கும் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் புத்தாக்க வழிகளில் முக்கியத்துவம் வழங்க வேண்டும்” என அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. இயேசு செய்தது போல, “அவர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று, அவர்களோடு சேர்ந்து, அவர்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.”

### 2. முகவர்களாக இளைஞர்களை ஏற்பது

எந்தவொரு மேய்ப்புப்பணி நடவடிக்கைகளில் இளைய தலைமுறையினரை ஒரு கருவி அல்ல மாறாக அவர்கள் மாற்றத்தின் முகவர்கள். பெரும்பாலான சமயத்தில், அவர்கள் “முக்கியமானவர் அல்ல அல்லது ஏற்புடையவர்கள் அல்ல” என சமூகம் பார்க்கிறது. இம்மாதிரியான போக்கை திருச்சபை கொண்டிருக்கக்கூடாது, ஏனெனில் நெடிய வாழ்க்கைப் பாதையில் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். இது அவர்களது உரிமை. “சமுதாயம் இளைய தலைமுறையினர்க்கு குறிப்பாக சில சிரமங்களை எதிர்நோக்குவோருக்கு கருத்துச் சுதந்திரம் வழங்க வேண்டும். இளைய தலைமுறையினர்க்கு கல்வி புகட்டி வழிநடத்த வேண்டியப் பொறுப்பு, திருச்சபைக்கு உண்டு” என அந்த அறிக்கை கூறுகிறது.

### 3. இளைய தலைமுறை மீது சமுதாயத்திற்குப் பொறுப்புண்டு

இளைய தலைமுறையின் கல்வி தங்களது பொறுப்பு என்பதை கிறிஸ்துவச் சமூகம் உணர வேண்டும். திருச்சபைக்குள் கல்வி புகட்டும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் தொடங்கி, இப்பணியில் சேவையாற்றுவோருக்குத் தகுந்த அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். நற்செய்திக்குச் சாட்சியம் பகருவோரின் முயற்சியையும் அதனால் விளையும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வோரின் செயலையும் போற்ற வேண்டும். மேய்ப்புப்பணி மன்றம் தொடங்கி, பங்கு மற்றும் மறைமாவட்டப் பணிகளில் இளைய தலைமுறையினரின் ஈடுபாட்டிற்கு திருச்சபை முக்கியத்துவம் வழங்க வேண்டும். இளைஞர்களின் கருத்துகள் சவால்மிக்கதாக இருந்தாலும், அவர்களின் சிந்தனைக்கேற்ற கருத்தையும் பங்கேற்பையும் வரவேற்க வேண்டும் என அவ்வறிக்கை குறிப்பிடுகிறது.

### பகிர்வுக்கான கேள்வி

- கிறிஸ்துவச் சமூகம், இளைய தலைமுறையினரை “தேடி, நாடி, அழைக்க வேண்டும்” என்பதன் பொருள் என்ன?
- பங்கில் அல்லது அகிச–வில் மூத்தவர்கள் இளைஞர்களை எவ்வாறு கருதுகிறார் என நீங்கள் நினைக்கிறீர்கள்?
- பங்கில் அல்லது அகிச–வில் கருத்துத் தெரிவிக்க இளைஞர்கள் வரவேற்கப்பட்டுள்ளனரா? அப்படி இருந்தால், அவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கப்படுகிறதா?

## இறைவார்த்தை:

### லூக்கா 24, 30-33

அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்தபோது அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள். உடனே அவர் அவர்களிடமிருந்து மறைந்துபோனார். அப்போது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா? என்று பேசிக் கொண்டார்கள். அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேமுக்குத் திரும்பி போனார்கள்.

### சிந்தனை:

- வாசகத்தைப் படித்தப் பின் நமது உள்ளங்களில் கடவுள் பேசுவதற்கு மௌனம் காப்போம்.
- நமது உள்ளத்தைத் தொட்ட வார்த்தை அல்லது வசனம் பற்றிப் பகிர்ந்து கொள்வோம்.

### செயல்:

பொதுவாக, நமது அகிச கூட்டங்களில் இளைஞர்கள் பங்கு கொள்கிறீர்களா? ஆம் என்றால் ஏன்? இல்லை என்றால் ஏன்?

நமது அகிச கூட்டங்களில் இளைஞர்கள் ஆர்வமாக பங்கு கொள்ளா விட்டாலும், அகிச-வின் மூத்த உறுப்பினர்கள் என்ற முறையில், நமது அகிச/பங்கு/சமூகத்திலுள்ள இளைஞர்களுக்கு எந்த வகையில் நமது ஆதரவையும் அக்கறையையும் காட்ட முடியுமா?